புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# பாரதியாரின் தமிழ் பண்பாட்டுச் சிந்தனைகள்

சை.சுஜிஷ்,
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல்
கல்லூரி,நெய்யூர்.

முனைவர்.ஜெ.சுஜாதா,
நெறியாளர்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,இலக்குமிபுரம்
கலை மற்றும் அறிவியல் கல்லூரி,நெய்யூர்.
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.

ஆய்வுச்சுருக்கம்

தமிழியல் என்னும் சொல்லாட்சி பரந்துபட்டது. தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்க்கல்வி என்றாற்போல் பல்வேறு கூறுகளைத் தன்னகத்தே கொண்டது. தமிழின் பல்வேறு பரிமாணங்களையும் உள்ளடக்கியது 'தமிழியல்' ஆகும். பாரதி வறுமையில் வாடிய போதிலும் வீட்டை மறந்து நாட்டை நினைத்து வாழ்ந்தவர். அவரது ஆற்றல் கவிதையில் மட்டுமல்லாமல் கலை, இலக்கியம், அரசியல், ஆன்மிகம், அறிவியல், பெண்கள் முன்னேற்றம், கைத்தொழில் பற்றிய விழிப்புணர்வு, மருத்துவம் எனப் பல்துறைகளில் புதுமைப் பெற்றவர். இதன் அடிப்படையில் பாரதியின் கவிதை மற்றும் உரைநடை வழியாக தமிழ் பண்பாட்டுச் சிந்தனைகளை விளக்க முடியும்.

## முன்னுரை

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக மதிக்கப் பெறும் தமிழ் மொழியின் மகாகவிகளுள் ஒருவராகக் கருதப்படுபவர் பாரதியார். தேசியம், பெண் விடுதலை, அரசியல், சமூகம், கலை, அறிவியல் என்று பலதரப்பட்ட பொருட்கள் குறித்து விரிவாகச் சிந்தித்தவர் பாரதியார். பாரதியின் கட்டுரைகளை படித்த பலரும் அறிந்திருந்த ஒரு செய்தி அவர் தனக்கு முற்பட்ட தமிழ் படைப்பாளர்களை எப்படி போற்றினார் என்பது தன்னுடைய கவிதைகளில் வள்ளுவனையும் இளங்கோவையும் கம்பனையும் அதிகம் குறிப்பிட்டு அவர்களால் தமிழ்நாடு அடைந்த சிறப்புகளையும் பறைசாற்றுகிறார்.கவிதை, கட்டுரை, சமூகம், குடும்பம் குறித்து தமிழ் பண்பாடு சிந்தனைகாக பாரதியார் எடுத்தியம்புவது இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

## பக்தி இலக்கியத்தில் ஒரு பரிணாமம்

பக்தி இலக்கியத்தில் மூன்று வகைக் கோட்பாடுகளை இலக்கியங்களின் வழியாக நாம் காணலாம். அவையாவன,

1. இறைவனைப் போற்றும் மந்திரங்கள், போற்றிப் பாடல்கள் வழியாகத் தொழுது போற்றுதல்.
2. இறைவனை ஆண்டவனாகவும், பிறவிப்பிணி நீக்குபவனாகவும் கருதி வீட்டுலகம் வேண்டும் பாடல்களைப் பாடுதல்.
3. இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் வைத்து, பக்தியில் காதற்சுவையைக் குழைத்து என்னை ஏற்றுக் கொள் என வேண்டுதல்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் இருபது நூற்றாண்டு இலக்கியங்களில் மேற்கூறிய மூன்று தன்மைகளே காணப்பெறுகின்றன. பாரதி இந்த மூன்றையும் கடந்து, கடவுளை இன்னும் நெருக்கமான முறையில் நோக்குகின்றார்.

*கவிதைகளில் தமிழியல் சிந்தனைகள்*

*செந்தமிழ் நாடு, தமிழ்த்தாய், தமிழ்மொழி வாழ்த்து, வாழிய செந்தமிழ் என்னும் கவிதைகளில் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம் பற்றிய தம் சிந்தனைகளைப் பாரதியார் வெளியிட்டுள்ளார். தமிழ் என்னும் தலைப்பில் அமைந்த அவரது கவிதை இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதில் பாரதியார் தமிழின் சுவையைத் தமிழ் தரும் இன்பத்தை அமுதின் சுவைக்கு இணையாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.*

*" தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்*
*இங்கு அமரர் சிறப்புக் கண்டார்" - பா.க.41*

*தெளிந்த தமிழ் அமிழ்தினைச் சுவைத்தவர்கள் இம்மையிலேயே அமர வாழ்வின் இன்பங்களைப் பெற்றவர்கள் ஆவார்கள் என்பது பாரதியின் கருத்தாகும்.*

*கட்டுரைகளில் தமிழியல் சிந்தனை*

*கடிதங்களிலும் கவிதைகளிலும் மட்டுமின்றி, தமது கட்டுரைகளிலும் தமிழியல் பற்றிய சிந்தனைகளை வெளியிட்டுள்ளார் பாரதியார். அவர்தம் கட்டுரைகளிலேயே தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள், தமிழ்க்கல்வி முதலியன பற்றி விரிவாகவும், விளக்கமாகவும் சந்தித்துள்ளார்.*

*தாய்மொழிக் கல்வியின் மேன்மை*

*மனிதனாகப் பிறந்த அனைவரும் தம் தாய்மொழிமீது பற்றுக்கொண்டு வாழ வேண்டும். அதன்மீது ஆழ்ந்த பக்தியே செலுத்த வேண்டும் என்பது பாரதியாரின் கொள்கை. சொந்த மொழி கற்றுக் கொள்ளாதவர்கள் அடுத்த ஜென்மத்தில் குரங்குகளாய்ப் பிறப்பார்கள் என்று மிகவும் வன்மையாகக் கண்டித்து எழுதியவர் அவர். இந்த ஜென்மத்தில் ஒருவன் மனிதப்பிறவி எடுத்ததன் பயன் தாய்மொழியைக் கற்றுக் கொள்வதுதான் என்பதை அழகாகவும் ஆணித்தரமாகவும் தம் கட்டுரைகளில் பல இடங்களில் பாரதியார் எடுத்துரைக்கின்றார்.*

*தாய்மொழியைக் கற்காமல் வேறுமொழியைக் கற்பவனைப் பார்த்து,*

*" வேறு வேறு பாஷைகள் - கற்பாய் நீ*
*வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ " - பா.க.158*

*என்று தம் கவிதை வரிகளில் கூறுகின்றார்.*

*சமுதாயம்*

*மேற்கத்திய நாடுகளின் செயல்பாடும், நடத்தையும்,உணவுப் பழக்கங்களும், உடையும், கொள்கையும், மதநெறிகளும், இலட்சியங்களும் நம்மைக் காட்டிலும் மேலானவையென்றும் அதை முழுவதும் நமது சமுதாயம் கடைப்பிடிக்க வேண்டுமென்று ஒரு பிரிவினரும் நம் முன்னோர்கள் அறிவுறுத்திய ஆசாரங்களையும்,சம்பிரதாயங்களையும், சடங்குகளையும், சித்தாந்தங்களையும் பின்பற்றினால் தான் நமக்கு வாழ்க்கையுண்டு என்று மற்றொரு பிரிவினரும் வாதிடுவதாகப் பாரதியார் குறிப்பிடுகிறார். மேலும், இத்தகைய கருத்துக்களை நாம் புறந்தள்ளிவிட்டு சுயமாகச் சிந்தித்துச் செயல்பட வேண்டியதை,*

*"... நன்மையும் அறிவும் எத்திசைத் தனினும்*
*யாவரே காட்டினும் மற்றவை தழுவி*
*வாழ் வீராயின் அச்சமொன்றில்லை..."*

*என்னும் பாடலடிகளால் அறிவுறுத்துகிறார்.*

*அத்துடன் சமுதாயத்தை வருத்தும் துன்பங்கள் நீங்கி நன்மை பெருகவும், அறம் வளரவும், புண்ணியம் செழிக்கவும், பாவங்கள் தொலையவும் மக்கள் மேன்மைகளைப் பெற்று வாழவும் அவர் வாழ்த்துவதில் அவருடைய சமுதாய அக்கறை புலனாகிறது. சமுதாயத்தில் மனிதன் நேர்மையுடன் வாழ்ந்து கவலைகளுக்கு இடம்கொடாமல் இருக்க அடிப்படையான உணவு, உறவு போன்றவற்றுடன் அழகிய உலகமும் இருப்பதாகக் கூறும் பாரதியார்,*

*" மண்பயனுற வேண்டும் வானகம் இங்குத்*
*தென்பட வேண்டும் உண்மை நின்றிட வேண்டும்"*

*எனவும் வேண்டுகிறார். இது இவ்வுலகம் நன்மையடையவும், மக்களுக்குத் தேவலோக வாழ்வு அமையவும், சத்தியம் நிலைபெறவும் சக்தியிடம் வேண்டுவதாக அமைகிறது.*

குடும்பம்

ஆதியில் மனிதன் மனம் போன போக்கில் கட்டுப்பாடில்லாமல் விலங்குகளைப்போல் வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் நாகரிகம் வளர வளர குடும்பம் என்ற அமைப்பு ஏற்பட்டு குடும்ப நிர்வாகத்தைப் பெண்களே முன்னின்று நடத்தும் தாய்வழிச் சமூகம் தோன்றியது. பின்னர் பெண்களுக்கிருந்த முழு சுதந்திரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு பெண் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டார். அவர்களுக்கு கல்வியும் மறுக்கப்பட்டது. இந்நிலையில், குடும்பம் நாகரிகமடையாவிட்டால் தேசம் நாகரிகமடையாது, குடும்பத்தில் விடுதலை இராவிடில் தேசத்தில் விடுதலை இராது என்று பாரதியார் குடும்ப விடுதலையை வலியுறுத்தினார். அதாவது நாட்டின் கல்விப் பரவலுக்குக் குடும்பக் கல்வியே அடிப்படை என்பது அவருடைய கருத்தாகும்.

ஆண்கள், பெண்களைவிடப் பலவகையில் மேம்பட்டவர்களாக இருந்தாலும், சாதாரண அறிவிலும், புத்திக்கூர்மையிலும், முடிவெடுக்கும் திறமையிலும் ஆண்களைவிடப் பெண்கள் மேலானவர்கள் என்பது பாரதியார் கருத்தாகும். குடும்பம் நடத்துவதற்காக ஆண் பொருளையீட்ட, வீட்டுக் கடமைகளைச் செய்து இல்வாழ்வை நல்வாழ்வாகச் செய்யும் வல்லமை பெண்களுக்கே உண்டு. இதனை,

"ஒன்றைக் குடும்பத் தனிலே - பொருள் ஓங்க
வளர்ப்பவன் தந்தை மற்றைக் கருமங்கள்
செய்தே - மனை வாழ்ந்திடச் செய்பவள் அன்னை"

என்னும் கவிதை வரிகள் மூலம் பாரதியார் எடுத்தியம்பியுள்ளார். பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு இளம் வயதிலேயே உள்நாட்டில் தயாரான பொருட்களை உபயோகிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், தாயார் மனதில் பயம் கொண்டவளாக இருந்தால் பிள்ளைகளின் மனதிலும் பயம் ஏற்படக் கூடிய ஆபத்து இருப்பதாகவும் கூறுகிறார். மேலும், வீரத்திலும் தன்மானத்திலும் பெற்ற பிள்ளைகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து அவர்களுக்கு ஆண்மையுடன் விடுதலையுணர்வையும் கற்பிக்க வேண்டும் என்பது போன்ற செய்திகள் பெண்களின் குடும்பப் பொறுப்பை உணர்த்துவது குறிப்பிடத்தக்கது.

ஒற்றுமையோடு வாழ்தல்

இயற்கைச் சக்திகளுடனும், எதிரிகளுடனும் போராடுவதற்காகப் பழங்காலத்தில் மனிதன் கூட்டமாக வாழ்ந்தான். கூட்டமாக வாழ்ந்தாலும் தங்களுக்குள் ஒற்றுமை அவசியமென்பதைக் காலப்போக்கில் உணர்ந்தான். சமூக விடுதலைக்காகவும், தேச விடுதலைக்காகவும் பாடுபட்ட பாரதி, இந்திய மக்கள் அனைவரும் ஒற்றுமையோடு வாழவேண்டியதன் அவசியம் பற்றி வற்புறுத்தியதை அறியலாம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்றும், நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வு என்றும் தமது படைப்புகளில் ஒற்றுமையை அவர் மிகவும் வலியுறுத்தியுள்ளார். சான்றாக, ஆங்கிலேயருக்கெதிரான முதலாம் சுதந்திரப் போரில் காசி அரசரின் வாரிசான முற்போக்கு எண்ணம் கொண்ட மங்கள்சிங்கும் கலந்து கொண்டார். சரியான தலைமையில்லாமல் இறுதியில் தோல்வியைத் தழுவிய சுதந்திரப் படைகளின் எண்ணிக்கை நாளடைவில் குறைந்து கொண்டே வந்தது. மங்கள்சிங்கின் கூட இருந்த ஆயிரம் வீரர்கள் பிராமணன், சத்திரியன், ஜாட், ஹிந்து, முஸ்லிம் என எல்லோரும் தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒன்றாகச் சமைத்து, ஒன்றாய் சாப்பிடும் மனோபக்குவம் அடைந்து விட்டதைக் கண்ட மங்கள்சிங் மரணத்தைக்கூட மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராயிருந்தான் என்பதன் மூலம் ஒற்றுமையின் வலிமையை உணர முடிகிறது. மேலும்,

" ஒன்றாய் நின்றினி
வென்றாயினுமுயிர் சென்றாயினும்
வலி குன்றா தோதுவம்"

என்னும் கவிதை வரிகளில் ஒற்றுமையாக இருந்து வந்தேமாதர முழக்கமிட வேண்டுமென்றும் வலியுறுத்துவதை அறியமுடிகிறது. ஒற்றுமையால் மேன்மையுண்டு என்று கூறும் பாரதியார் ஒருவருக்கொருவர் துன்பமிழைத்துக் கொள்ளுதல் குற்றமென்று உணர்ந்தால் வாழ்க்கையில் எந்தவிதமான குறையும் ஏற்படாதென்றும் எடுத்துரைக்கிறார்.

முடிவுரை

பாரதி என்ற மகாகவிஞன் தான் வாழ்ந்த காலத்தில் தமிழையும் தன் தேசத்து மக்களையும் நேசித்து மக்களிடையே பகுத்தறிவினை வளர்த்து இருண்டு கிடந்த மக்கள் வாழ்வில் தன் எழுத்துக்களால் வெளிச்சம் கொடுத்து 'இனி ஒரு விதி செய்வோம்' என்று பாடிய புதுமைக் கவிஞன் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பிடித்த கவிஞன் என்றால் அது மிகையல்ல. பாரதி காட்டிய வழியில் நாமும் தமிழையும் எம் சமூகத்தையும் நல்வழியில் இட்டுச் செல்வோம். பாரதியின் தமிழ் பண்பாட்டுச் சிந்தனைகள் நமக்குணர்த்துவது இதுவேயாகும்.

துணைநின்ற நூல்கள்


1. பத்மதேவன், பாரதியார் கவிதைகள், கற்பகம் புத்தகாலயம், பதிப்பு-2018.
2. வேங்கடாசலபதி ஆ.இரா. பாரதியின் சுயசரிதைகள், காலச்சுவடு பதிப்பகம், பதிப்பு - 2016.
3. வேங்கடாசலபதி ஆ.இரா. பாரதி கருவூலம், காலச்சுவடு பதிப்பகம், பதிப்பு - 2010.
4. ரவீந்திரன் சி.ஆர். தமிழகப் பண்பாடு, உங்கள் நூலகம், பதிப்பு - 2020.
5. ஜெயகாந்தன், மகாகவி பாரதியார் கட்டுரைகள், சாகித்திய அகாதெமி, பதிப்பு - 2015.


********* ********* ********** ********* ********* ********** ********** **********